மாநிலத்திலும் உயர்ந்த ரக அரிசியை உற்பத்தி செய்ய விவசாயிகள் முன்வருவதற்கு ஊக்கம் அளிக்காதா? ஆகவே நமது மாநிலக் கொள்முதல் விலையையும் உயர்த்துவதற்கு அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : கொள்முதல் விலை என்பது வேறு விஷயம். ஆந்திர மாநில நெல்லூர் அரிசியைச் சாப்பிட்டே பழகியவர்களுக்கு—அவர்கள் கொஞ்சம் பேராகத் தான் இருக்கிறார்கள் என்றாலும், அவர்களுடைய தேவையும் கவனிக்கப்படுகிறது, இந்த அரசாங்கத்தினால் என்பது தான் இங்கே கவனிக்கப்பட வேண்டிய விஷயம். நெல்லூர் அரிசிதான் வாங்கிக்கொள்ள வேண்டுமென்று சொல்லவில்லை.

Veterinary College

* 19 Q.—THIRU A. M. RAJA : Will the Hon. the Minister for Agriculture be pleased to state when the Department of Flaying was separated from the Department of Meat Inspection in the Madras Veterinary College?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியில் உள்ள இறைச்சி—சோதனைத்துறையிலிருந்து, தோலுரிக்கும் பிரிவு பிரிக்கப்படவில்லை.

Building Works in Co-operative Department

* 20 Q.—THIRU S. RAMACHANDRAN : Will the Hon. the Minister for Law and Co-operation be pleased to state—

(*a*) whether there is any proposal to create a separate Engineering cell in the Co-operative Department to supervise and execute the various building works under the Co-operative Department; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) & (இ) பொதுப் பணித் துறையிலிருந்து மாற்றப்பட்ட உதவிப் பொறியாளர் ஒருவரும் பதின்மூன்று பொதுப்பணித்துறை மேற்பார்வையாளர்களும் கூட்டுறவுத் துறையில் ஏற்கெனவே பணியாற்றி வருகின்றனர். அவர்கள், அத் துறையில் கட்டிடம் கட்டும் வேலைகளை மேற்பார்வையிட்டு வருகின்றனர். பதின்மூன்று மேற்பார்வையாளர்களில் இருவர் தலைமையிடத்திலும் பதினொருவர் மாவட்டத் தலைமையிடத்திலும் பணியாற்றி வருகின்றனர்.

திரு. எஸ். இராமச்சந்திரன் : மாநிலம் முழுவதற்கும் ஒரே ஒரு துணைப் பொறியாளர் இருப்பதனால் வேலைகள் துரிதமாக நிறைவேற்றப்படுவதற்குக் கஷ்டம் இருக்கிறது. ஆகையால் இதில் கூட பொறியியல் வல்லுநர்களை அதிகரிக்கும் உத்தேசம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அவ்வப்போது தேவையை ஆராய்ந்து முடிவு செய்யப்படும்.